# World Christian Fellowship

www.wcflondon.com
wcflondon@gmail.com

## யோவான்

## லூக்கா 6:12-16

***லூக்கா* 6:12-16, *அந்நாட்களிலே, அவர் ஜெபம்பண்ணும்படி ஒரு மலையின்மேல் ஏறி, இராமுழுதும் தேவனை நோக்கி ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தார். 13. பொழுது விடிந்தபோது, அவர் தம்முடைய சீஷர்களை வரவழைத்து, அவர்களில் பன்னிரண்டுபேரைத் தெரிந்துகொண்டு, அவர்களுக்கு அப்போஸ்தலர் என்று பேரிட்டார். 14. அவர்கள் யாரெனில், பேதுரு என்று தாம் பேரிட்ட சீமோன், அவன் சகோதரனாகிய அந்திரேயா, யாக்கோபு, யோவான், பிலிப்பு, பர்த்தொலொமேயு, 15. மத்தேயு, தோமா, அல்பேயுவின் குமாரனாகிய யாக்கோபு, செலோத்தே என்னப்பட்ட சீமோன், 16. யாக்கோபின் சகோதரனாகிய யூதா, துரோகியான யூதாஸ்காரியோத்து என்பவர்களே.***

***முதல் குழுவினர்:***

*1. சீமோன் என்னும் பேதுரு*
*2. அந்திரேயா*
*3. யாக்கோபு*
*4. யோவான்*

*பேதுரு, யாக்கோபு மற்றும் யோவானின் பெயர்கள் பட்டியலில் மாறிமாறி இடம்பெற்றுள்ளது. பேதுருவின் பெயர் எல்லாவற்றிலும் முதலில் இடம்பெறுகிறது. ஆனால் இவர்களின் பெயர்கள் எப்போதுமே முதல் குழுவாகவே கருதப்படுகிறது.*

*இரண்டாம் குழுவினர்:*

1. *பிலிப்பு*
2. *பர்த்தொலொமேயு (அ) நாத்தான்வேல்*
3. *மத்தேயு*
4. *தோமா*

*இந்த இரண்டாவது குழுவும் எல்லா பட்டியலிலும் இடம்பெற்றுள்ளது.*

*பிலிப்பு, பர்த்தொலொமேயு, மத்தேயு மற்றும் தோமா ஆகிய நால்வரின் பெயர்கள் அடிக்கடி இடம் மாறி இடம்பெற்றாலும், இந்த இரண்டாம் குழுவில் பிலிப்புவின் பெயரே எப்போதும் முதலாவதாக இடம்பெறுகிறது.*

*மூன்றாம் குழுவினர்:*

1. *அல்பேயுவின் குமாரனாகிய யாக்கோபு*
2. *செலோத்தே என்னப்பட்ட சீமோன்*
3. *யாக்கோபின் குமாரனாகிய யூதாஸ்*
4. *யூதாஸ்காரியோத்து*

*எல்லா பட்டியலிலும் ஒன்றுபோலவே இடம்பெறுகிறது. நடுவில் இருக்கும் செலோத்தே என்னப்பட்ட சீமோன்*

*மற்றும் யாக்கோபின் குமாரனாகிய யூதாஸ் ஆகிய இருவரின் பெயர்களும் அவ்வப்போது இடம் மாறி இடம்பெறுகிறது.*

*ஆனால் அப்பேயுவின் குமாரனாகிய யாக்கோபின் பெயர் முதலிலும் யூதாஸ்காரியோத்தின் பெயர் கடைசியிலும் இடம்மாறாமல் இடம்பெற்றுள்ளது.*

## யோவான்

*இவன் யாக்கோபின் சகோதரன்.*

*யோவான் சுவிசேஷம் எழுதியிருப்பதால் யோவானை நமக்கு நன்றாய் தெரியும்.*

*இவர் மேலும் மூன்று நிருபங்களையும் எழுதியுள்ளார்.*

*அத்துடன் புதிய ஏற்பாட்டின் கடைசி புத்தகமான வெளிப்படுத்தின விசேஷத்தையும் எழுதியுள்ளார்.*

*யோவானைக் குறித்து அறிந்துகொள்ள நமக்கு நிறைய ஆதாரங்கள் கொடுக்கப்பட்டுள்ளது.*

- *இயேசுவின் வாழ்க்கைக் கதையை யோவான் தன் சுவிசேஷத்தில் பகிர்ந்துள்ளார்.*
- *திருச்சபைக்கு கூறும்படியாய் பரிசுத்த ஆவியானவர் ஏவிய காரியங்களை மூன்று நிருபங்களாய் எழுதியுள்ளார்.*
- *கிறிஸ்துவின் தரிசனங்களை பிரத்யேகமான தீர்க்கதரிசனமாய் வெளிப்படுத்தின விசேஷத்தில் பதிவுசெய்துள்ளார்.*

*சுவிசேஷத்தில் பகிர்ந்துள்ள காரியங்களைக் குறித்து யோவான் எந்த அளவிற்கு அவற்றை அறிந்துள்ளார்*

*என்பதையும், நிருபத்தில் பகிர்ந்துள்ள காரியங்களை வைத்து திருச்சபையைக் குறித்து யோவான் என்ன அறிந்திருக்கிறார் என்பதையும், கிறிஸ்துவின் தரிசனங்களை பெற்றுக்கொண்டதை வைத்து வெளிப்பாட்டை அவர் எப்படி பார்த்திருக்கிறார் என்பதையும் நாம் அறியக்கூடும்.*

*கிறிஸ்துவின் மிக நெருக்கமான சீஷர் வட்டாரமான பேதுரு மற்றும் யாக்கோபோடு சேர்ந்து யோவானும் இயேசுவைப் பின்பற்றினான். அந்திரேயாவும் எப்போதும் இந்த முதல் குழுவில் தான் இருந்தான்.*

*அப்போஸ்தலர் பெயர் பட்டியல்களில் மூன்று குழுவாய் பிரிக்கப்பட்டிருந்தனர். இதில் முதல் நான்கு பேரும் எப்போதுமே முதல் குழுவில் தான் இடம்பெற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.*

*அதில் பேதுரு, யாக்கோபு மற்றும் யோவான் ஆகிய மூவரும் கிறிஸ்துவோடு அதிக நெருக்கத்தில் இருந்தனர். பேதுருவின் பெயருக்கு அடுத்தபடியாய் யோவானின் பெயரே அதிகமாய் இடம்பெறுகிறது. ஆனால் பேதுருவைக் காட்டிலும் அதிகம் எழுதியவர் என்னும் பெருமை யோவானையே சேரும். பேதுரு இரண்டு நிருபங்கள் மட்டுமே எழுதியுள்ளார். யோவான் புதிய ஏற்பாட்டின் பெரும்பான்மையை எழுதியுள்ளார். சுவிசேஷத்தில் அவருடைய பங்களிப்போடு முக்கியமான பதிவை எழுதியுள்ளார். மேலும் அப்போஸ்தலர் நடபடிகளின் முதல் பன்னிரண்டு அதிகாரங்களில் பேதுருவின் உடன் ஊழியராகவும் பங்காற்றியுள்ளார்.*

*யோவான் யாக்கோபின் சகோதரன்.*

***லூக்கா 5:10, சீமோனுக்குக் கூட்டாளிகளான செபெதேயுவின் குமாரராகிய யாக்கோபும் யோவானும் அந்தப்படியே***

***பிரமித்தார்கள். அப்பொழுது இயேசு சீமோனை நோக்கி: பயப்படாதே, இதுமுதல் நீ மனுஷரைப் பிடிக்கிறவனாயிருப்பாய் என்றார்.***

*யாக்கோபும் யோவானும் செபதேயுவின் குமாரர்கள் என்பதினால் அவர்கள் இருவரும் சகோதரர்கள். அவர்கள் சீமோனின் கூட்டாளிகளுமாயிருந்தனர்.*

*இந்த முதல் குழுவில் இருந்த நான்கு பேர்களில் இரண்டு அண்ணன் தம்பிகள் இருக்கின்றனர். பேதுருவும் அந்திரேயாவும் சகோதரர்கள். யாக்கோபும் யோவானும் சகோதரர்கள். இவர்கள் அனைவரும் இணைந்து மீன்பிடிக்கும் தொழிலை செய்துவந்தனர். இந்த மீன்பிடி தொழிலில் இவர்கள் கூட்டாளிகள்.*

- *இவர்கள் ஒரே இடத்திலிருந்து வந்தவர்கள்.*
- *இவர்கள் ஒரே இடத்தில் வசித்தவர்கள்.*
- *இவர்கள் ஒவ்வொருநாளும் இணைந்து வேலை செய்தனர்.*
- *இவர்கள் நெருங்கிய நண்பர்களாகவும் தொழில் கூட்டாளிகளாகவும் இருந்தனர்.*

*யோவான் சற்று தாழ்மையுள்ளவனாகவே இருந்தான். அவனுடைய வாழ்க்கையை இயேசு செதுக்குவதற்கும், அன்பை கற்றுக்கொள்வதற்கும் அவன் தன்னை அர்ப்பணித்திருந்தான்.*

*அவன் தன்னுடைய இடிமுழக்க சகோதரனோடு கூட தன் ஓட்டத்தைத் துவங்கினான்.*

***மாற்கு** 3:17, **செபெதேயுவின் குமாரனாகிய யாக்கோபு**, **யாக்கோபின் சகோதரனாகிய யோவான்**, **இவ்விருவருக்கும்***

**இடிமுழக்கமக்களென்று அர்த்தங்கொள்ளும் பொவனெர்கேஸ் என்கிற பெயரிட்டார்.**

- யோவான் நிலையற்றவன்.
- யோவான் கடினமானவன்.
- யோவான் முரட்டுத்தனமானவன்.
- யோவான் வாஞ்சையுள்ளவன்.
- யோவான் வைராக்கியமுள்ளவன்.
- யோவான் சுய குறிக்கோள் கொண்டவன்.

வானத்திலிருந்து அக்கினியை இறக்கி சமாரியர்களை அழிக்கலாம் என்று யாக்கோபு இயேசுவிடத்தில் சொல்லும்போது, யோவானும் அவனோடு இருந்து அவனுடைய திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தான். இதைக் கேட்டது யாக்கோபும் யோவானும் என்று வேதம் சொல்லுகிறது.

அந்திரேயா ஒருபுறம் அமைதியாக மக்களை இயேசுவிடம் கொண்டுவர, யாக்கோபும் யோவானும் அவிசுவாசிகளை எரித்துக் கொல்லப்போவதாக இயேசுவிடம் சொல்லுகின்றனர்.

அவர்களுடைய தாய், அதாவது செபதேயுவின் மனைவி இயேசுவிடத்தில் வந்து, “என் குமாரராகிய இவ்விரண்டுபேரில் ஒருவன் உமது வலது பாரிசத்திலும், ஒருவன் உமது இடது பாரிசத்திலும் உட்கார்ந்திருக்கும்படி அருள்செய்யவேண்டும்” என்று கேட்டபோது அது யாக்கோபுக்காய் மட்டுமல்ல, யோவானுக்கும் சேர்த்தே விண்ணப்பித்திருக்கிறாள்.

- *யோவான் ஏவப்பட்டான்.*
- *யோவான் சுய குறிக்கோள் கொண்டவன்.*
- *யோவான் புகழ்பெற விரும்பியவன்.*

*யார் தேவனுடைய ராஜ்யத்தில் பெரியவனாயிருப்பான் என்று அப்போஸ்தலர்களுக்கிடையில் ஏற்பட்ட வாக்குவாதத்தில் யோவானும் இடம்பெற்றிருந்தான்.*

*"யாக்கோபும் யோவானும்" என்று குறிப்பிடப்படும்போது யாக்கோபின் பெயரே எப்போதும் முதலாவதாக இடம்பெறுகிறது. இருவரில் யாக்கோபே பலம் வாய்ந்தவானவும் மூத்தவனாகவும் இருந்திருக்கக்கூடும். யோவானும் சற்றும் இளைத்தவனில்லை.*

*மத்தேயு, மாற்கு, லூக்கா சுவிசேஷத்தை வாசிக்கும்போது யோவான் எப்போதும் இயேசுவோடும் பேதுருவோடும் யாக்கோபோடும் இணைந்தே இருப்பது தெரியும்.*

*ஒரேயொரு முறை யோவான் தனித்து நின்று பேசுகிறான்.*

***மாற்கு 9ஆம் ஆதிகாரம்.***

*இங்கே யாக்கோபோடும் பேதுருவோடும் இல்லாமல் தனித்து இருக்கிறான்.*

*யோவான் மட்டும்.*

*முதல் மூன்று சவிசேஷங்களில் இந்த ஒரு இடத்தில் மட்டுமே யோவானின் பெயர் யாரோடும் சேர்த்து இடம்பெறாமல், தனித்து இடம்பெற்றுள்ளது. முதல் மூன்று சுவிசேஷங்களையும் ஒருநோக்கு சுவிசேஷம் என்பர். ஏனென்றால், அவைகள் மூன்றும் இயேசுவின் வாழ்க்கையையே விவரித்துள்ளது. ஆனால் யோவான்*

*சுவிசேஷம் இயேசுவின் அற்புதங்களையும் அவருடைய சுய அங்கீகாரத்தையும் பிரதிபலிக்கும் வாக்கியங்களை வைத்து, இயேசுவின் தெய்வீகத்தை மையப்படுத்துகிறது.*

*மாற்கு 9ஆம் அதிகாரத்தில் நாம் யோவானை தனித்து பார்க்கமுடியும். யோவானைக் குறித்த மற்ற தகவல்களுக்கு அவனுடைய சுவிசேஷம், நிருபங்கள், மற்றும் வெளிப்படுத்தின விசேஷத்தை நாடவேண்டியுள்ளது. ஆனால் இங்கே யோவனைக் குறித்த ஒரு சரித்திர சம்பவம் பதிவிடப்பட்டுள்ளது.*

*மாற்கு **9:1**, அன்றியும், அவர் அவர்களை நோக்கி: இங்கே நிற்கிறவர்களில் சிலர் தேவனுடைய ராஜ்யம் பலத்தோடே வருவதைக் காணுமுன், மரணத்தை ருசிபார்ப்பதில்லையென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.*

*இயேசு அங்கே நிற்பவர்களைப் பார்த்து இங்கே நிற்கிறவர்களில் சிலர் தேவனுடைய ராஜ்யம் பலத்தோடே வருகிறதைக் காணும்முன், மரணத்தை ருசிபார்ப்பதில்லை என்று பிரமிக்கத்தக்க வார்த்தையை சொல்லுகிறார். இது ஓர் ஆச்சரியமான காரியம். ராஜ்யத்தின் பலத்தைப் பார்ப்பதற்கு முன் இங்கிருக்கிறவர்களில் சிலர் மரிக்கப்போவதில்லை.*

***இயேசு எதைக் குறித்து பேசுகிறார்**?*

*வரப்போகிற ஒரு மகிமையான அனுபவத்தைக் குறித்து இயேசு பேசுகிறார்.*

*ஆறுநாளைக்கு பின்பு உடனே அது நடந்தேறுகிறது.*

***மாற்கு** 9:2, **ஆறு நாளைக்குப்பின்பு**, **இயேசு பேதுருவையும் யாக்கோபையும் யோவானையும் அழைத்து**, **உயர்ந்த***

***மலையின்மேல் அவர்களைத் தனியே கூட்டிக்கொண்டுபோய், அவர்களுக்கு முன்பாக மறுரூபமானார்.***

*இங்கிருப்பவர்களில் சிலர் தேவனுடைய ராஜ்யத்தின் மகிமையை ஆறுநாளைக்கு பின்பு காண்பீர்கள் என்று இயேசு சொன்னார். இயேசு தன் நெருங்கிய வட்டாரமான பேதுருவையும் யாக்கோபையும் யோவானையும் கூட்டிக்கொண்டு (அந்திரேயாவை தவிர்த்து) உயர்ந்த மலையின் மேல் ஏறி, அவர்களின் கண்களுக்கு முன்பு மறுரூபமானார்.*

*அதாவது, அவர் தன் மீதிருந்த மாம்சத்திற்கும் நித்திய தேவனின் தன்மையை பிரதிபலிக்கும் ஷெக்கினா மகிமைக்கும் இடையேயிருந்த திரையை விலக்கினதினால் அவர் மீது ஒளி மின்னியது.*

***மத்தேயு** 17**இல்**, சீஷர்கள் அதைக்கண்டு அதிர்ச்சியடைந்து தன்னிலை மறந்தனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அவர்கள் செத்தவர்களைப்போல விழுந்தார்கள். அதற்கு முன்பாய் இவர்களுக்கு இந்த அனுபவம் நிகழ்ந்ததில்லை. இது ஒரு இயற்கைக்கு அப்பாற்பட்ட அனுபவம். அதைப் போன்ற ஒன்றை கற்பனை செய்வதும் சாத்தியமில்லை.*

*பூமியில் உள்ள வன்னான்கள் யாரும் வெளுக்க முடியாத அளவிற்கு இயேசுவின் வஸ்திரம் வெண்மையாய் மின்னியது. அந்த அளவிற்கு வெண்மையை எதினாலும் கொண்டுவரமுடியாது.*

*அது மின்னுகிற, ஒளிர்கிற, வெண்மையாய் பிரகாசிக்கிற ஒரு ஒளிபோல் இருந்தது. அதில் எலியாவையும் மோசேயையும் மகிமையான ஒரு பிரதிபலிப்பாய் பார்க்கிறார்கள்.*

*அவர்கள் மிகவும் பயந்தார்கள்.*

***மாற்கு 9:6-8, அவர்கள் மிகவும் பயந்திருந்தபடியால், தான் பேசுகிறது இன்னதென்று அறியாமல் இப்படிச் சொன்னான். 7. அப்பொழுது, ஒரு மேகம் அவர்கள்மேல் நிழலிட்டது: இவர் என்னுடைய நேசகுமாரன், இவருக்குச் செவிகொடுங்கள் என்று அந்த மேகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று. 8. உடனே அவர்கள் சுற்றிலும் பார்த்தபோது, இயேசு ஒருவரைத்தவிர வேறொருவரையும் காணவில்லை.***

*பேதுரு, யாக்கோபு மற்றும் யோவான் ஆகிய மூவருக்கும் இது ஒரு மறக்கமுடியாத அனுபவமாயிருந்தது.*

***மாற்கு 9:9, அவர்கள் மலையிலிருந்து இறங்குகிறபோது, அவர் அவர்களை நோக்கி: மனுஷகுமாரன் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கும்வரைக்கும், நீங்கள் கண்டவைகளை ஒருவருக்கும் சொல்லவேண்டாம் என்று கட்டளையிட்டார்.***

*இதைச் செய்வது மிகவும் கடினம். அவர்கள் இதுவரை யாரும் பார்த்திராத மகிமையான ஒன்றை சாட்சியிட்டிருக்கிறார்கள். அதை மற்றவர்களிடம் சொல்லாமல் இருப்பது மிகவும் கடினம். இது அவர்களுக்கு போடப்பட்ட மிகப்பெரிய கட்டுப்பாடு.*

*சீஷர்கள் எப்போதுமே தங்களில் யார் பெரியவன் என்று விவாதித்துக்கொண்டேயிருந்தனர். இந்த மகிமையான காட்சியை பார்த்த இவர்கள் அதை தங்களுடைய மேன்மைக்கு ஒரு சான்றாய் எடுத்து பயன்படுத்த தடைவிதிக்கப்பட்டது அவர்களுக்கு மிகவும் வேதனையாயிருந்திருக்கும்.*

***மாற்கு 9:10, மரித்தோரிலிருந்து எழுந்திருப்பது என்னவென்று அவர்கள் ஒருவரிடத்தில் ஒருவர் விசாரித்து, அந்த வார்த்தையைத் தங்களுக்குள்ளே அடக்கிக்கொண்டு:***

*அவர் மரணத்திலிருந்து உயிர்த்தெழுவதைக் குறித்து பேசுவதை கேட்டுக்கொண்டிருந்தனர். அதை விட்டுவிட்டு இதைக் குறித்து பேச ஆரம்பித்தனர்.*
*பேசுவதற்கு அநேகம் இருக்கிறது:*

- *மோசேயைக் குறித்து பேசலாம்,*
- *எலியாவைக் குறித்து பேசலாம்,*
- *இயேசுவின் சரீரத்தில் ஒளிர்ந்த தேவ மகிமையின் பிரகாசத்தைக் குறித்து பேசலாம்,*
- *உயிர்த்தெழுதலைக் குறித்து பேசலாம்.*

- *அவர்கள் ராஜ்யத்தை சாட்சியிட்டுள்ளனர்.*
- *அவர்கள் மெய்சிலிர்த்துப் போயிருக்கவேண்டும்.*
- *அவர்கள் இதுவரை யாராலும் பார்க்கப்படாத, அறியப்படாத ஒன்றை சாட்சியிட்டுள்ளனர். அதுவே சம்பவிக்கவும் போகிறது.*

*வரப்போகிற மகிமைக்கான ஒரு முன் அடையாளம் இது. இங்கேதான் நாம் இருக்கப்போகிறோம்.*

***மாற்கு 9:33, அவர் கப்பர்நகூமுக்கு வந்து, வீட்டிலே இருக்கும்போது, அவர்களை நோக்கி: நீங்கள் வழியிலே எதைக்குறித்து உங்களுக்குள்ளே தர்க்கம்பண்ணினீர்கள் என்று கேட்டார்.***

*இயேசு தகவலை எதிர்பார்க்கவில்லை.*
*இயேசு அறிக்கையிடுதலை எதிர்பார்த்தார்.*

*அவர்கள் என்ன பேசினார்கள் என்பதை அவர் துல்லியமாய் அறிந்திருந்தார்.*

***மாற்கு* 9:34*, அதற்கு அவர்கள் பேசாமல் இருந்தார்கள்; ஏனெனில் அவர்கள் தங்களுக்குள்ளே எவன் பெரியவன் என்று வழியில் தர்க்கம்பண்ணினார்கள்.***

***அவர்கள் ஏன் அமைதியாய் இருந்தனர்?***
*அவர்கள் மிகவும் சங்கடப்பட்டனர்.*

***அவர்கள் ஏன் சங்கடப்பட்டார்கள்?***
*எவன் பெரியவன் என்று அவர்கள் ஒருவரோடு ஒருவர் தர்க்கம் பண்ணியதால், அதை சொல்லுவதற்கு தயங்கினார்கள்.*
*பேதுருவும் யாக்கோபும் யோவானும் இதைக் குறித்து தர்க்கம் பண்ணியதை சற்று கற்பனை செய்துபாருங்கள்.*
*கீழே உட்கார்ந்து பன்னிருவரையும் அழைத்து இயேசு இதைக் கூறுகிறார்.*

***மாற்கு* 9:35-37*, அப்பொழுது அவர் உட்கார்ந்து, பன்னிருவரையும் அழைத்து: எவனாகிலும் முதல்வனாயிருக்க விரும்பினால் அவன் எல்லாருக்கும் கடையானவனும், எல்லாருக்கும் ஊழியக்காரனுமாயிருக்கக்கடவன் என்று சொல்லி, 36. ஒரு சிறு பிள்ளையை எடுத்து, அதை அவர்கள் நடுவிலே நிறுத்தி, அதை அணைத்துக்கொண்டு: 37. இப்படிப்பட்ட சிறு பிள்ளைகளில் ஒன்றை என் நாமத்தினாலே ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான்; என்னை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை அல்ல, என்னை அனுப்பினவரை ஏற்றுக்கொள்ளுகிறான் என்றார்.***

*ஒருவரோடொருவர் தர்க்கம்பண்ணி சண்டை போட்டுக்கொள்வதை விட்டுவிட்டு, ஒருவர் மற்றவரை குழந்தைகளாய் ஏன் ஏற்றுக்கொள்ளக் கூடாது. ஒருவர் மற்றவரை ஏற்றுக்கொள்ளும்போது அவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான். ஏனென்றால் நான் அந்த நபரில் வாழ்கிறேன்.*

*நான் உங்களிடத்தில் வந்ததுபோல ஒருவரோடொருவர் சண்டை போடாமல், ஒருவரையொருவர் கட்டித்தழுவ பழகுங்கள்.*

*முதலாவது நிற்பதைவிட கடைசியில் நிற்கப் பழகுவது அவசியம்.*

*இது கடினமான கடிந்துகொள்ளுதல்.*

*யோவானும் இந்த செய்தியைக் கேட்கிறான். முதல் மூன்று சுவிசேஷங்களில் இந்த இடத்தில்தான் யோவான் வாய் திறந்து பேசுகிறான்.*

***மாற்கு** 9:38, **அப்பொழுது யோவான் அவரை நோக்கி: போதகரே,** **நம்மைப் பின்பற்றாதவன் ஒருவன் உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துகிறதைக் கண்டோம்;** **அவன் நம்மைப் பின்பற்றாதவனானதால்,** **அவனைத் தடுத்தோம் என்றான்.***

*யோவான் தவறை ஒத்துக்கொண்டதால் பேசத்துவங்குகிறான். இது குழு சார்ந்த கொள்கை. அவர்கள் நம்முடைய குழுவை சேர்ந்தவர்கள் அல்ல.*

*யோவானால் அதைப் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. இவன் இடிமுழக்கத்தின் மகனல்லவா. இவன் பொவனெர்கேஸ். இது குழு சார்ந்த கொள்கை.*

எல்லாவற்றையும் தானே வைத்து அனுபவிக்க எண்ணுகிறான். யாரோடும் பகிர்ந்து கொள்வதை விரும்பவில்லை. குறிப்பாய், தன் குழுவில் இல்லாதவர்களோடு பகிர்ந்துகொள்வதை விரும்பாதவன். இது தான் யோவான்.

இதை அவன் விரும்பாத ஒரு செய்கையாய் முன்வைத்து அறிக்கையிடுகிறான்.

யோவான் முரட்டுத்தனமானவன். போட்டி மனப்பான்மை கொண்டவன். இயேசுவின் நாமத்தில் ஊழியம் செய்த ஒரு மனிதனை கடிந்துகொள்ளுகிறான்.

"நாங்கள் அதைச் செய்தோம்" என்று யோவான் நேரடியாக ஒத்துக்கொள்கிறான். ஏனென்றால், இயேசுவின் பேச்சை கேட்டமாத்திரத்தில், தான் செய்தது தவறென்று எண்ணத் துவங்குகிறான்.

அதை வார்த்தைகளின் மூலமாய் வெளிப்படையாய் அறிக்கையிடக்கூடிய ஆவியைப் பெற்றிருந்தான்.

யோவானின் அறிக்கை அவனுடைய மறுரூபமாக்கப்பட்ட அனுபவத்தைக் காட்டுகிறது. அவனுடைய குற்றமனசாட்சி அவனை அவ்வாறு செய்யத் தூண்டுகிறது.

இங்கே பழைய யோவானிலிருந்து புதிய மாற்றத்திற்குள் நுழையும் யோவானை காணமுடிகிறது.

எனவே, யோவான் பேசிய இந்த ஒரே பேச்சு அவனுடைய நேர்மறையான சிந்தையையும். குழுசார்ந்த பாகுபாட்டு எண்ணத்தையும் பாரபட்சமுள்ள பார்வையையும் காட்டுகிறது.

**அப்படிப்பட்ட ஒரு மனிதனை தேவன் ஏன் தெரிந்தெடுத்தார்?**

*ஏனென்றால், அவர்களை மீட்டு, செதுக்கி தேவனுக்கு பயன்படுகிற வகையில் மாற்றிவிடலாம். ஆனால் அந்த வகையான துணிச்சலும் பலமும் கிறிஸ்தவ திருச்சபை வரலாற்றிற்கு அவசியப்படும்.*

*தேவனுக்கு மிகுந்த தைரியமுள்ள, குறிக்கோள்கொண்ட, துணிச்சலுள்ள, வாஞ்சையுள்ள, வைராக்கியங்கொண்ட, துணிவான நபர்கள் தேவை. தேவன் எதிர்பார்க்கும் அந்த மனிதனாய் யோவான் இருந்தான். சத்தியமும் அன்பும் கலந்த ஒரு ஆளத்துவம் கொண்டவனாய் யோவான் இருந்தான்.*

*மாற்கு 9இல், ஒரு கடிந்துகொள்ளுதல் யோவானை அன்புள்ள மனிதனாய் மாற்றத் துவங்குகிறது. நேர்மறையான சிந்தை, ஒத்துப்போகாத தன்மை, பொறுத்துக்கொள்ள முடியாத குணம், ஆகியவற்றிலிருந்து தெய்வீகமான சத்தியத்திற்கு நேராய் உருவாக்கப்படுகிறான்.*

*புதிய ஏற்பாட்டின் அனைத்து ஆசிரியர்களைக் காட்டிலும் யோவான் காரியத்தை வெளிப்படையாய் அடித்து பேசக்கூடியவன்.*

*இவன் முழுநிச்சயத்தோடு பேசக்கூடியவன்.*

*யோவான் அரைகுறையாய் பேசுகிறவன் இல்லை.*

*யோவான் எந்த தயக்கமும் இல்லாமல் நேரடியாகவும் வெளிப்படையாகவும் பேசக்கூடியவன்.*

- *ஒளியோ அல்லது இருளோ,*
- *வாழ்வோ அல்லது சாவோ,*
- *தேவனுடைய ராஜ்யமோ அல்லது பிசாசுடைய ராஜ்யமோ,*

- *தேவனுடைய பிள்ளைகளோ அல்லது சாத்தானின் பிள்ளைகளோ,*
- *நீதிமானுக்கான நியாயத்தீர்போ அல்லது துன்மார்க்கனுக்கான நியாயத்தீர்ப்போ,*
- *ஜீவனுக்கேதுவான உயிர்தெழுதலோ அல்லது மரணத்திற்கேதுவான உயிர்த்தெழுதலோ,*
- *கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதோ அல்லது புறக்கணிப்பதோ,*
- *கனி கொடுப்பதோ அல்லது கனி கொடுக்கத் தவறுவதோ,*
- *தேவ மகிமைக்காய் கனி கொடுப்பதோ அல்லது வெட்டப்பட்டு எரிக்கப்படுவதோ,*
- *கீழ்ப்படிதலோ அல்லது கீழ்ப்படியாமையோ,*
- *நேசிப்பதோ அல்லது நேசியாமலிருப்பதோ,*

*எல்லாவற்றிற்கும் வெளிப்படையாகவும் தெளிவாகவும் யோவான் பதில்கொடுக்கிறார்.*

*அவருடைய 1 யோவான் நிருபத்தை வாசிக்கும்போது, அதில் அவர் இப்படியாய் சொல்லுகிறார்.*

- *நீங்கள் விசுவாசிகளாயிருந்தால், நீங்கள் ஒளியாயிருக்கிறீர்கள்.*
- *உங்கள் பாவங்களை அறிக்கையிட்டால் இயேசு நடந்தபாதையில் நடக்கிறீர்கள்.*
- *உன் சகோதரனை நேசிப்பதினால் தேவனுடைய கற்பனைக்கு கீழ்படிகிறீர்கள்.*
- *நீங்கள் உலகத்தை நேசிக்கவில்லை. அதினால் தொடர்ந்து பாவம் செய்வதில்லை.*

- *தேவையில் இருக்கும் உன்னுடைய சகோதரனுக்கு உதவிசெய்வதின் மூலம் கற்பனைகளை கைக்கொள்ளுகிறீர்கள்.*
- *நீதியுள்ள வாழ்க்கை வாழ்ந்தால் சுத்தமாயிருப்பீர்கள்.*
- *நீங்கள் சத்தியத்தை நேசிக்கிறீர்கள்.*

*யோவான் தன் சத்தியத்தில் எதையும் மழுப்பவில்லை. கொஞ்சம் இடைவெளி தேவைப்படுவோர் பவுலின் எழுத்துக்களை வேண்டுமானால் சாhந்துகொள்ளலாம்.*

***2** யோவானில் தவறு என்று தெரிகிற எல்லாவற்றிலுமிருந்து முழுமையான வேறுபிரிக்கப்படுதலை ஊக்குவிக்கிறார்.*

*2 **யோவான்** 1:11, **பிரியமானவனே**, **நீ தீமையானதைப் பின்பற்றாமல்**, **நன்மையானதைப் பின்பற்று**, **நன்மைசெய்கிறவன் தேவனால் உண்டாயிருக்கிறான்**; **தீமைசெய்கிறவன் தேவனைக் காணவில்லை.***

### வெளிப்படையான பேச்சு.

*நீங்கள் நன்மை செய்தால் தேவனால் உண்டாக்கப்பட்டுள்ளீர்கள். நன்மை செய்யவில்லையென்றால் தேவனால் உண்டாக்கப்படவில்லை. அதுதான் யோவானின் ஆளத்துவம். அவன் மழுப்பாமல் நேரடியாகவும் வெளிப்படையாகவும் அதிக நிச்சயத்துடனும் பேசக்கூடிய மனிதன்.*

*அவன் சத்தியத்தை மறைத்து பேசாமல் தெளிவாய் பேசினான். அவன் அதை ஒரு போதக அதிகாரத்தோடே செய்தான் என்று சொல்ல வேண்டும். இயேசுவும் அதே அதிகாரத்தோடே நேர்மாறான அவனுடைய சிந்தையை*

*மாற்றி, எதற்கும் இணங்காத அவனுடைய தன்மையை சத்தியத்திற்கு இணங்கச்செய்து, அவனை வெளிப்படையான சத்தியத்தை பேசும்படி செய்தார்.*

*தைரியமான, உறுதியான, துணிச்சலான, வைராக்கிங்கொண்ட, வாஞ்சையுள்ள ஒரு நபராக வேண்டும் என்னும் அவனுடைய குறிக்கோள், இந்த பாதையில் எங்கோ செம்மையாக்கப்பட்டது.*

*அவனுடைய நிருபமெங்கிலும் பெருமையையோ, சுய தம்பட்டத்தையோ, சுய மேட்டிமையையோ, சுய குறிக்கோளையோ பிரதிபலிப்பதை நாம் பார்க்கமுடியாது.*

## யோவானின் குணாதிசயம்

- ***சத்தியம்***
- ***அன்பு***

*யோவானின் புதிய ஏற்பாட்டு பதிவுகள் அனைத்தும் சத்தியத்திலும் அன்பிலும் அஸ்திபாரமிடப்பட போகிறது. இந்த இரண்டு ஆவிக்குரிய காரியங்களும் தேவனுடைய குணாதிசயங்களில் அவசியமானவைகள்.*

*அவைகள்,*

- *ஈடுசெய்ய முடியாதவைகள்*
- *அத்தியாவசியமானவைகள்*
- *பிரிக்கமுடியாதவைகள்*

### யோவானை எப்படி சித்தரிப்பது?

*சத்தியமும் அன்பும் கொண்ட மனிதன்*

*இந்த இரண்டும் ஒன்றோடொன்று கலக்கக்கூடியது.*

*சத்தியத்தையும் அன்பையும் சரிநிகராய் கலந்த ஒரு ஆவிக்குரிய கலவையை பெற்றிருந்தான்.*

*சத்தியத்தை அறியுங்கள், அதை அன்பினால் தாங்குங்கள்.*

*எபேசியர் **4:13**, அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார்.*

*திருச்சபையின் ஊழியம் மற்றும் அதின் இலக்கைக் குறித்த தேவனுடைய திட்டம்.*

*தேவன் தன்னுடைய திருச்சபைக்கு வரம் பெற்ற நபர்களை கொடுக்கிறார். அவரால் மீட்டுக் கொள்ளப்பட்ட வரம் பெற்றவர்கள். அவர்களுக்கு சபையின் தலைமைத்துவ பொறுப்பு கொடுக்கப்பட்டுள்ளது.*

***அவர்களுடைய பொறுப்பு?***

***எபேசியர்** 4:12, **பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு**, **சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும்**, **கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும்**,*

*இதுவே பரிசுத்தமாகுதல். இது ஒரு முதிர்ச்சியின் அனுபவம். இதுவே ஆவிக்குரிய வளர்ச்சி.*

***இலக்கு**?*

***எபேசியர்** 4:13, **மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும்***

***ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரணபுருஷராகும்வரைக்கும்,***

*நாம் அனைவரும் ஒரே இடத்தை நோக்கித் தான் போய்க் கொண்டிருக்கிறோம். விசுவாசமே நம்மை முடிவுபரியந்தம் நடத்துகிறது. தேவ குமாரனைக் குறித்த அறிவே ஆவிக்குரிய முதிர்ச்சியடைந்த ஓர் மனிதனை கிறிஸ்துவின் பரிபூரணத்தைச் சார்ந்த அந்தஸ்துக்கு உயர்த்துகிறது.*

*கிறிஸ்துவில் பூரணபுருஷராகும்பொருட்டு பரிசுத்தவான்களை சீர்பொருந்தபண்ணவும், அவர்களை முதிர்ச்சியடைய செய்வதற்கும் தேவன் திருச்சபைக்கு மேய்ப்பர்கள், அப்போஸ்தலர்கள், சுவிசேஷகர்கள், போதிக்கிற ஆசிரியர்களைக் கொடுத்துள்ளார்.*

*இலக்கு...*

- *பரிசுத்தமாகுதல்*
- *அனைத்து ஊழியங்கள்*
- *திருச்சபை*
- *கிறிஸ்துவைப்போல் மாறும் ஆவிக்குரிய வளர்ச்சி*

*வரம் பெற்ற தேவ மனிதர்களைக் கொண்டு தேவன் சபையில் செய்யும் அனைத்து காரியங்களும், பரிசுத்தமாகுலுக்கு அவருடைய ஆவியானவர் செய்கிற அனைத்து ஆவிக்குரிய வளர்ச்சிகளும் நம்மை முதிர்ச்சியுள்ள ஒரு நபராய் மாற்றுவதற்கே.*

*கிறிஸ்துவாய் மாறுவதே முதிர்ச்சியின் வரையறை!*

***எதிர்மறையான பக்கம்?***

***எபேசியர்** 4:14, **நாம் இனிக் குழந்தைகளாயிராமல்**, **மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப்போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல்**,*

*நாம் இனி குழந்தைகள் இல்லை!*

*குழந்தைகள் பலவீனமானவர்கள். ஆவிக்குரிய முதிர்ச்சியின்மைக்கு குழந்தைகள் இங்கு உருவகமாய் பயன்படுத்தப்படுகின்றனர்.*

*தேவன் நம்மை நடத்துகிற பாதையில் இனி நாம் பகுத்தறிவுள்ளவர்களாய், சுதந்திரவாளிகளாய், பிரிவினையற்றவர்களாய், ஞானமுள்ளவர்களாய், அறிவுள்ளவர்களாய் இருக்கப்போகிறோம்.*

*மேலும் பலவீனமுள்ள குழந்தையாயிருப்பதிலிருந்தும் ஞானத்தின் முதிர்ச்சிக்கு நேராகவும் திசை திருப்பப்படுகிறோம். அன்பில் சத்தியத்தை பேசும், கிறிஸ்துவின் பூரணத்தை அடையும் நிலைக்கு நாம் நகர்த்தப்படுகிறோம். தலையாகிய கிறிஸ்துவின் சுபாவத்தின் எல்லா நிலையிலும் நாம் வளரவேண்டும்.*

***ஆவிக்குரிய முதிர்ச்சி என்றால் என்ன**?*

*அன்பினால் சத்தியத்தை பேசுவதே அதின் அர்த்தம்.*

*நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சி பாதையில் சத்தியத்தைப் பேசுகிற நிலையை நாம் அடைகிறோம். ஆனால் அன்போடு செயல்படுத்துகிறோம். இந்த இரண்டு ஆவிக்குரிய உயர்பண்புகளும் சமநிலையில் செயல்படுகிறது. இதை எளிதாக சொல்லிவிடலாம், ஆனால் வாழ்நாள் முழுவதும் அதை செயல்படுத்தவேண்டும்.*

இது நேர்த்தியான சத்தியத்தை அறிவதைக் குறிக்கிறது. அத்துடன் ஆவியின் கனியாகிய அன்பை சுதந்தரிப்பதையும் குறிக்கிறது.

சத்தியத்திற்கும் அன்பிற்குமான மிக நேர்த்தியான உதாரணம், ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவே. அவரே நல்ல மாதிரி.

நேர்த்தியான சத்தியத்தை அறிந்து, ஆவியில் நடந்து, அன்பை பிரதிபலிக்கிறவர்கள் இந்த சமநிலையை உடையவர்களாயிருக்கமுடியும்.

சத்தியத்தை அன்போடு பேசும்போதெல்லாம் நம்மிடத்திலிருந்து வெளிப்படும் வார்த்தைகள் அனைத்தும் அன்பான தெய்வீக வெளிப்பாட்டின் பிரதிபலிப்புகள்.

கிறிஸ்து சத்தியத்தை மட்டுமே பேசினார். தேவனுடைய சிந்தையை துல்லியமாய் பிரதிபலிக்காத வார்த்தைகளை அவர் பேசவில்லை. அவர் அன்பில் பேசினார். தேவன் நியாயந்தீர்க்கப் போகிற ஜனங்களைப் பார்த்து பரிதபித்த கிறிஸ்துவின் அன்பை எவரும் கேள்வியெழுப்ப முடியாது. ஆனால் அதில் மட்டுமின்றி, தான் நேசித்த ஜனங்களுக்காய் சிலுவை பரியந்தம் போய் தன் ஜீவனை கொடுக்குமளவிற்கு அந்த அன்பை நிருபித்தார்.

இதுவே சமநிலை.

இன்று பல்வேறு மக்கள் அன்பின் பக்கத்தில் மட்டும் உறுதியாய் நிற்கிறார்கள். அவர்கள் அறிமையாமையில் இருக்கிறார்கள்.

உணர்ச்சிவசப்பட்டு, அன்பை மட்டுமே அவர்கள் செயல்படுத்தும் தவறை அவர்கள் செய்கிறார்கள். இது உண்மையான அன்பிற்கான பாதை இல்லை.

*ஆனால் இன்னொருபுறம், சகல இறையியல் சத்தியங்களையும் நேர்த்தியாய் அறிந்த பாரம்பரிய கிறிஸ்தவர்களும் உண்டு. ஆனால் அவர்களுக்கு நேசிக்கத் தெரியாது. சுயதம்பட்டம் அடித்துக்கொள்வார்கள். அவர்கள் உயிரில்லாத, ஈர்ப்பில்லாத சத்தியத்தோடு விடப்பட்டவர்கள்.*

*கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சிக்குத்தக்கதாக, பூரண புரஷராகும் முதிர்ச்சியடைந்த விசுவாசிகளே சத்தியத்தையும் அன்பையும் பிரதிபலிக்கின்றனர்.*

*சத்தியத்தை அறியுங்கள், அன்போடு அதை பேசுங்கள்.*

*தேவன் வெளிப்படுத்திய விதத்தில் சத்தியத்தை அறியவும் கிறிஸ்து அன்புகூர்ந்ததுபோல அன்பு கூருவதுமே இலக்கு.*

*அதுவே யோவான் யாரென்பதைக் காண்பிக்கிறது.*

*யோவான் தன்னைக் குறித்து தன்னுடைய சுவிசேஷத்தில் பிரதிபலித்துள்ளதைப் பார்க்கும்போது யோவான் தாழ்மையுள்ளவன் என்று எண்ணத் தூண்டுகிறது.*

*அவன் தாழ்மையுள்ளவனாகவும் இருந்தான். ஆனால் அவன் ஆரம்பத்தில் அப்படியில்லை. ஆனால் அவனுடைய சுவிசேஷத்தில் அவன் சுயசெயல்திறன் கொண்டவனாக காண்பிக்கப்பட்டுள்ளதால், பலர் அவனை அப்படிப்பட்டவனாகவே இருந்திருப்பான் என்று எண்ணிக்கொள்கின்றனர்.*

*எப்போதும் இயேசுவின் தோளில் சாய்ந்தவனாய் ஒரு அமைதியின் சொரூபமாய் காட்சியளிக்கிறான். மிகவும் நெருக்கமான இடத்தில் காண்பிக்கப்படுகிறான்.*

*தன்னுடைய சுவிசேஷத்தின் 21 அதிகாரங்களில், தன்னுடைய பெயரை ஒருமுறைகூட அவன் பயன்படுத்தவில்லை. அவன்*

*தெரிந்துகொள்ளப்பட்டவன் என்பதால் தன் பெயரை அவன் தாராளமாய் குறிப்பிட்டிருக்கலாம். ஆனால் அவன் அப்படி செய்யவில்லை.*

***அவன் தன்னை எப்படி காண்பிக்கிறான்?***

*அவன் தேவனோடு சேர்ந்தே தன்னை அடையாளப்படுத்திக் கொள்ளுகிறான்.*

***யோவான் 13:21-25, இயேசு இவைகளைச் சொன்னபின்பு, ஆவியிலே கலங்கி: உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான் என்று, மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேனென்று சாட்சியாகச் சொன்னார். 22. அப்பொழுது யாரைக்குறித்துப் பேசுகிறாரோ என்று சீஷர்கள் ஐயப்பட்டு, ஒருவரையொருவர் நோக்கிப்பார்த்தார்கள். 23. அந்தச் சமயத்தில் அவருடைய சீஷரில் இயேசுவுக்கு அன்பானவனாயிருந்த ஒருவன் இயேசுவின் மார்பிலே சாய்ந்துகொண்டிருந்தான். 24. யாரைக் குறித்துச் சொல்லுகிறாறென்று விசாரிக்கும்படி சீமோன்பேதுரு அவனுக்குச் சைகைகாட்டினான். 25. அப்பொழுது அவன் இயேசுவின் மார்பிலே சாய்ந்துகொண்டு: ஆண்டவரே, அவன் யார் என்றான்.***

*அவன் தன்னுடைய பெயரை எங்கேயும் உபயோகிக்கவில்லை.*

*அவன் தன்னைப் பற்றி பேசுவதற்கு முயற்சிக்கவில்லை.*

*இயேசுவைக் கொண்டே தன்னை அடையாளப்படுத்திக்கொள்கிறான்.*

*அவன் எப்போதும் கிறிஸ்துவை கனப்படுத்துகிறவனாயிருந்தான்.*

**யோவான் *13:1-2,* பஸ்கா பண்டிகைக்கு முன்னே, இயேசு இவ்வுலகத்தைவிட்டுப் பிதாவினிடத்திற்குப் போகும்படியான தம்முடைய வேளை வந்ததென்று அறிந்து, தாம் இவ்வுலகத்திலிருக்கிற தம்முடையவர்களிடத்தில் அன்புவைத்தபடியே, முடிவுபரியந்தமும் அவர்களிடத்தில் அன்புவைத்தார். சீமோனின் குமாரனாகிய யூதாஸ்காரியோத்து அவரைக் காட்டிக்கொடுக்கும்படி பிசாசானவன் அவன் இருதயத்தைத் தூண்டினபின்பு, அவர்கள் போஜனம் பண்ணிக்கொண்டிருக்கையில்;**

*இயேசு தன்னுடைய எல்லா அப்போஸ்தலர்களையும் நேசித்தார். ஆனால் யோவான் அதை வேறுவிதமாய் பற்றிக்கொண்டான் என்று எனக்கு எண்ணத் தோன்றுகிறது. இயேசுவின் வாழ்க்கையை பிரதிபலிக்கும் யோவான் சுவிசேஷத்தையும், திருச்சபை ஜீவியத்தை மையப்படுத்தும் யோவான் நிருபங்கள் மற்றும் எதிர்காலத்தை முன்னறிவிக்கும் வெளிப்படுத்தின விசேஷ சத்தியத்தை பிரசங்கிக்கும்போது, அவற்றை அன்பைக் கொண்டு சமநிலைபடுத்துவது அவசியமாயிருந்தது.*

*எனவே தேவன் யோவானை விசேஷமாக தெரிந்தெடுத்து, அன்புகூர அவனுக்கு கற்றுக்கொடுக்கிறார்.*

**ஒரு மனிதனுக்கு அன்புகூர கற்றுக்கொடுப்பது எப்படி?**

*அவன் உன்னை எப்படி நேசிக்கவேண்டும் என்று விரும்புகிறாயோ அதே வழியில் அவனை நேசிப்பதின் மூலம் அது சாத்தியமாகிறது.*

*அன்புகூரப்படுதலின் மூலம் அன்புகூரப் பழகுகிறாய்.*

*யோவான் அதை புரிந்துகொண்டு பற்றிக்கொண்டான். அவன் இயேசுவினால் அழைக்கப்பட்டவன் மட்டுமல்ல; இயேசுவினால் தெரிந்துகொள்ளப்பட்டவன் மட்டுமல்ல;*

*இயேசுவினால் போதிக்கப்பட்டவன் மட்டுமல்ல; மாறாக, இயேசுவினால் நேசிக்கப்பட்டவன்.*

*தன்னுடைய வாழ்நாள் முழுவதும் இயேசு அவனை நேசித்துக் கொண்டேயிருந்தார். அவன் அதை புரிந்துகொண்டான்.*

*சிலவையின் கீழே யோவானும் இயேசுவுடைய தாயாராகிய மரியாளும் இன்னும் சில பெண்களோடும் நின்றிருந்தனர்.*

**யோவான் 19:26-27, அப்பொழுது இயேசு தம்முடைய தாயையும் அருகே நின்ற தமக்கு அன்பாயிருந்த சீஷனையும் கண்டு, தம்முடைய தாயை நோக்கி: ஸ்திரீயே, அதோ, உன் மகன் என்றார். *27.* பின்பு அந்தச் சீஷனை நோக்கி: அதோ, உன் தாய் என்றார். அந்நேரமுதல் அந்தச் சீஷன் அவளைத் தன்னிடமாய் ஏற்றுக்கொண்டான்.**

*தான் இயேசுவினால் நேசிக்கப்பட்ட சீஷன் என்பதை யோவான் மறுபடியும் இங்கு குறிப்பிடுகிறான்.*

*இயேசு அவனை அதிகமாய் நேசித்தார் என்பதை உணர்ந்த யோவான், அந்த அன்பை, அக்கறையை, இரக்கத்தை, கிருபையை தானும் பிரதிபலித்தான்.*

*லூக்காவின் பதிவின்படி, இயேசுவின் மரணத்திலிருந்து இரண்டு ஆண்டுகள் கழித்து, அதாவது, இயேசுவின் மரணத்திற்கும் சீஷர்கள் அங்கீகரிக்கப்படுவதற்கும் இடைபட்ட இரண்டாண்டுகளில், இயேசு சிலுவையில் தன் தாயைப் பார்த்து என்ன சொன்னார் என்பதை யோவான் புரிந்துகொண்டான்.*

***யோவான் அன்புகூர கற்றுக்கொண்டானா?***

*இயேசு பேதுருவைப் பார்த்து, ''**என் ஆடுகளை மேய்ப்பாயாக**'' என்றார்.*

*இயேசு யோவானைப் பார்த்து, ''**என் தாயாரை பார்த்துக்கொள்வாயாக**'' என்றார்.*

*மரியாள் மரிக்கும்வரையிலும் யோவான் எருசலேமை விட்டும் அவளைவிட்டும் போகவில்லை என்று சபை சரித்திர பதிவுகள் சொல்லுகின்றன. அவன் மேன்மையான வழியில் நேசிக்கப்பட்டதினால் தேவனை நேசிக்கிறவனாய் மாறினான்.*

*சமாரியர்களை எரித்துக் கொல்ல நினைத்த மனிதனையம் இயேசு நேசிக்கிறார். தேவ ராஜ்யத்தில் தன் கனத்தை எதிர்பார்த்த மனிதனையும் அவர் நேசித்தார்.*

*சத்தியமும் அன்பும் கலந்த யோவானுடைய வாழ்க்கையை பார்க்கும்போது, அவன் பேசுகிற எல்லாமே சத்தியமாகவே வெளிப்படுகிறது.*

*அவனுடைய சுவிசேஷம் கிறிஸ்துவைக் குறித்த இறையியல். கிறிஸ்துவையும் சுவிசேஷத்தையும் குறித்த இறையியல். இது ஒரு தெய்வீக சத்தியம்.*

*அவனுடைய நிருபங்களும் உண்மையான இரட்சிப்பை ஊர்ஜிதப்படுத்துகிறது. அவனுடைய வெளிப்படுத்தின விசேஷம் மகிமையான கிறிஸ்தவயியல். இது ஒரு தேவ குமாரனுடைய நித்திய மகிமையின் பிரதிபலிப்பு. அவனிடத்தில் சத்தியம் இருந்தது, அன்பும் இருந்தது.*

*அவனுடைய எழுத்துக்களில் "அன்பு'' என்னும் பதத்தை **80**தரம் பயன்படுத்துகிறான். அதினால்தான் அவன் ''அன்பின் சீஷன்'' என்று வழங்கப்பட்டான்.*

*தேவன் அவனை நேசித்ததினால் அவனும் நேசிக்கப்பழகிக்கொண்டான். அந்த செய்தியையும் பெற்றுக்கொண்டான்.*

*தேவன் அவனை நேசித்த விதத்தில் அவனும் நேசிக்கப் பழகிக்கொண்டான்.*

*தேவன் அன்பாயிருக்கிறார், அவருடைய குமாரனை நேசிக்கிறார், சீஷர்களை நேசிக்கிறார், தேவனை இயேசு நேசிக்கிறார், இயேசு சீஷர்களையும் நேசிக்கிறார், ஒவ்வொருவரையும் இயேசு நேசிக்கிறார், மனிதர்கள் தன்னை நேசிக்கவேண்டும் என்று இயேசு விரும்புகிறார், அந்த அன்பு நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறது என்று யோவான் போதிக்கிறார்.*

*யோவானின் போதனையில் அன்பு முக்கிய இடத்தை வகிக்கிறது. அது முதன்மையான போதனையாய் முன்வைக்கப்படுகிறது. அவனுடைய அன்பை அவன் முகமூடியாய் அணிந்துகொள்ளவில்லை. அவன் வாழ்க்கை முழுவதும், பொய்யோடு அவன் ஒத்துப்போகவில்லை. அதாவது, கி.பி. 90, 95, என்று மரிக்கும்வரையில் அவன் அப்படியே இருந்துள்ளான்.*

*கி.பி. 98இல் அவன் மரணமடைந்தான். கி.பி. 96இல் வெளிப்படுத்தின விசேஷத்தை எழுதினான். தன்னுடைய நிருபங்களை எழுதிய 90களில் இன்னும் சத்தியத்தை இடிமுழக்கத்தோடே யோவான் பேசுகிறான்.*

*தவறான கிறிஸ்தவயியல்களுக்கு எதிராக முழக்கமிடுகிறான்.*

*பொய்யுக்கும் சூதுக்கும் விரோதமாக முழக்கமிடுகிறான்.*

*பாவத்திற்கு எதிராக முழக்கமிடுகிறான்.*

*ஒழுக்கமின்மைக்கு விரோதமாக முழக்கமிடுகிறான்.*

*கடைசிவரையிலும் இடிமுழக்கத்தின் மகனாகவே இருந்தான்.*

*சத்தியத்தை சத்தியமாய் போதிக்கிறவனே அன்பின் சரியான பிரதிநிதியாய் இருக்கமுடியும் என்பதை தேவன் அறிந்திருந்தார். அப்படியில்லாதிருந்தால், கிறிஸ்துவை போதிக்கும் அநேகர் பயணிக்கும் உணர்வசப்பட்டு, பாவத்தோடு ஒத்துப்போகிற ஒரு பாதையில் இன்னும் பயணிக்க நேரிட்டிருக்கும். அவனிடத்தில் அன்பு இருந்தது. ஆனால் அது சத்தியத்தின் வீரியத்தை எந்த விதத்திலும் பாதிக்கவில்லை.*

*“சாட்சி” என்ற வார்த்தையை யோவான் **70** தரம் பயன்படுத்துகிறார். இது அதிகமாய் பயன்படுத்தப்பட்ட மற்றொரு முக்கியமான வார்த்தை. ஏனெனில் எப்போதுமே சத்தியத்திற்கு சாட்சியாய் நின்றார்.*

*யோவான் ஸ்நானகனின் சாட்சியை அவர் மேற்கோள் காண்பிக்கிறார்,*

- *வேதாகமத்தின் சாட்சி,*
- *பிதாவின் சாட்சி,*
- *கிறிஸ்துவின் சாட்சி,*
- *அற்புதத்தின் சாட்சி,*
- *பரிசுத்த ஆவியின் சாட்சி,*
- *அப்போஸ்தலர்களின் சாட்சி,*
- *சத்தியத்தின் சாட்சி,*

*சத்தியத்தை நேசிக்கிறவன் தேவனையும் சகமனிதர்களையும் நேசிக்கிறான். யோவான் இயேசுவின் தோள்களில் சாய்ந்தது ஏதோ ஒரு ஈர்ப்பின் நிமித்தம் அல்ல; மாறாக, இயேசுவின் வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு சத்திய வார்த்தையையும் கேட்பதற்கே அப்படி செய்தான். அவனுடைய தேவன் அவனுக்கு கொடுத்த சுத்தமான அன்பை சுவைக்க அவன் விரும்பினான்.*

*அப்போஸ்தலர் நடபடிகளின் துவக்க அதிகாரங்களில் யோவான் தன்னுடைய அன்பையும் சத்தியத்தையும் போதிக்கும் வாஞ்சையையும் பேதுருவோடு சேர்த்து, சபை ஸ்தாபித்தலில் வெளிப்படுத்தினான். பல ஆண்டுகள் கழித்து, முதலாம் நூற்றாண்டின் இறுதியில், எல்லா அப்போஸ்தலர்களும் மரித்த பின்பும், அவன் மட்டும் உயிரோடிருந்து புறஜாதி சபைகளை அன்பினாலும் சத்தியத்தினாலும் ஸ்தாபித்துக்கொண்டிருந்தான்.*

*எழுபது ஆண்டுகளில் தற்போதுள்ள துருக்கி தேசமான கிழக்கு ஆசியாவிலுள்ள திருச்சபைகளுக்கு முற்பிதாவாய் மாறினார். பத்மு தீவில் அவர் சிறை வைக்கப்பட்டார்.*

**வெளிப்படுத்தல்** *1:9,* ***"உங்கள் சகோதரனும், இயேசுகிறிஸ்துவினிமித்தம் வருகிற உபத்திரவத்திற்கும் அவருடைய ராஜ்யத்திற்கும் அவருடைய பொறுமைக்கும் உங்கள் உடன்பங்காளனுமாயிருக்கிற யோவானாகிய நான் தேவவசனத்தினிமித்தமும், இயேசுகிறிஸ்துவைப்பற்றிய சாட்சியினிமித்தமும், பத்மு என்னும் தீவிலே இருந்தேன்."***

*அவன் போதித்த அன்பின் சத்தியம் கலாச்சார எல்லைகளையும் மீறியதாய் இருந்ததால், 5 மைல் நீளமும் 10 மைல் அகலமும் கொண்ட சிறிய தீவில் அவன் சிறை வைக்கப்பட்டான்.*

*அது துருக்கி தேசத்தின் மேற்கு கடற்கரை எல்லையிலுள்ள ஏகியோன் கடலில் அமைந்துள்ளது. தேவன் மீதும் மக்கள் மீதும் இருந்த அவனுடைய அன்பினிமித்தம் சத்தியத்தை போதித்ததினால் அந்த குன்றின் மீது அவன் சிறை வைக்கப்பட்டான்.*

*கி.பி. 96இல் வெளிப்படுத்தின விசேஷத்தைப் பெற்றுக்கொள்கிறான். இரண்டாண்டுகள் கழித்து, அதாவது கி.பி. 98இல் ட்ராஜன் மன்னனின் ஆட்சியின்போது அவர் மரணமடைந்தான்.*

*"என் சிறு பிள்ளைகளே ஒருவரையொருவர் நேசியுங்கள்" என்பதே அவருடைய வாயிலிருந்து அடிக்கடி ஒலித்துக்கொண்டேயிருந்த வாக்கியம் என்று சில பாரம்பரியங்கள் பதிவுசெய்துள்ளது.*

**2 John 1:4-5, *பிதாவினால் நாம் பெற்ற கற்பனையின்படியே உம்முடைய பிள்ளைகளில் சிலர் சத்தியத்திலே நடக்கிறதை நான் கண்டு மிகவும் சந்தோஷப்பட்டேன். 5. இப்பொழுதும் அம்மாளே, நாம் ஒருவரிலொருவர் அன்புகூரவேண்டுமென்று, உமக்குப் புதிய கற்பனையாக எழுதாமல், ஆதிமுதல் நமக்கு உண்டாயிருக்கிற கற்பனையாக எழுதி, உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன்.***

*பிதாவிடத்திலிருந்து உனக்கு சத்தியம் வருகிறது. நீ அதில் நடக்கிறாய். உனக்கு சத்தியம் கிடைத்ததில் மகிழ்ச்சி, ஆனால் அன்பில்லாமல் நீ சத்தியத்தை கையாள முடியாது.*

***என்ன வகையான அன்பைக் குறித்து நாம் பேசிக்கொண்டிருக்கிறோம்?***

**1 யோவான் 2:6-7, *அவருக்குள் நிலைத்திருக்கிறேனென்று சொல்லுகிறவன், அவர் நடந்தபடியே தானும்***

***நடக்கவேண்டும். 7. சகோதரரே, நான் உங்களுக்குப் புதிய கற்பனையை அல்ல, ஆதிமுதல் நீங்கள் பெற்றிருக்கிற பழைய கற்பனையையே எழுதுகிறேன்; அந்தப் பழைய கற்பனை நீங்கள் ஆதிமுதல் கேட்டிருக்கிற வசனந்தானே.***

***கீழ்படிதலின் அன்பு.***

*நீ தேவனை நேசிக்கிறாய். அதினால் கீழ்படிகிறாய்.*

*நீ கிறிஸ்துவை நேசிக்கிறாய், அவருடைய வார்த்தைக்கு கீழ்படிகிறாய்.*

*தேவனை நேசியுங்கள், கிறிஸ்துவை நேசியுங்கள், அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து மற்றவர்களையும் நேசியுங்கள்.*

***சுருக்கவுரை:***

*சத்தியத்தில் நடப்பதால் யோவான் மகிழ்ச்சியடைகிறான்.*

*அன்பில்லாமல் சத்தியத்தில் நடக்கமுடியாது.*

*வார்த்தைக்கு கீழ்ப்படிவதின் மூலம் தேவனையும் கிறிஸ்துவையும் அவர்கள் நேசித்தனர்.*

*தவறின் மீது அன்பை மூழ்கவிடாதீர்கள். அதை வெறும் உணர்வுக்கு அடிமையாக்காதீர்கள்.*

***முடிவுரை:***

*டி.எல். மூடி, நரகத்தைக் குறித்தும், ஆக்கினைத் தீர்ப்பைக் குறித்தும் மட்டும் பிரசங்கித்துக்கொண்டிருந்த பிரசங்கியார். இவர் சிகாகோவிலுள்ள திருச்சபையிலிருந்தபோது, ஹாரி என்ற சாதாரணமான ஒரு ஆங்கிலேயர், "தேவன்... இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" என்னும் யோவான்*

*3:16லிருந்து பிரசங்கித்ததாகவும், தேவ அன்பை தான் முதன்முறையாகவும் புரிந்துகொண்டதாகவும் மூடி குறிப்பிடுகிறார்.*

*அந்த மனிதன், தான் இந்த வாரத்தின் ஒவ்வொரு இரவிலும் அதே தலைப்பில் பேசிக்கொண்டிருப்பதாகவும் அறிவித்ததைக் கண்டு மூடி தொடப்பட்டார். உங்கள் நண்பர்களைக் கூட்டிவாருங்கள். இது ஒரு புதிய கண்டுபிடிப்பு. இந்த சாதாரண ஆங்கிலேயர் ஒவ்வொரு நாள் இரவிலும் இதே வாக்கியத்தைக் கொண்டு பிரசங்கித்துக்கொண்டேயிருக்க, அந்த வாரத்தின் இறுதியில் மூடி, தேவனுடைய அன்பை தான் முதல் முறையாக புரிந்துகொண்டதாக அறிவித்தார்.*

*திருச்சபையின் ஏறத்தாழ எல்லா யுகங்களிலும் இதை நாம் சொல்லக்கூடும்.*